**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.**

முன்னிலை: **திரு.S.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

**2023 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 13–ஆம் நாள் திங்கள்கிழமை**

**அசல் வழக்கு எண் – 360/2012**

**CNR No: TNAL050000582012**

காந்திமதி – வாதி

/எதிர்/

சாந்தி – பிரதிவாதி

தாவா சொத்தில் வாதிக்கு உரிய உரிமையை விளம்புகை செய்து அதன் தொடர் பரிகாரமாக தாவா சொத்தில் வாதியின் அனுபவத்தில் பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, அல்லது ஏஜெண்டுகளோ எவ்விதத்திலும் இடைஞ்சல் செய்யாமல் இருக்கவும் ஆக்கிரமிக்காமல் இருக்கவும், வேண்டி பிரதிவாதிக்கெதிராக தீர்ப்பு செய்தும், தாவா சொத்தில் வடபுறத்தில் புதியதாக சிமெண்ட் சிலாப் போட்டு வைத்து எழுப்பியுள்ள கீழ்மேல் 35 அடியுள்ள காம்பவுண்ட் சுவற்றினை அகற்ற வேண்டி பிரதிவாதிக்கெதிராக செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கியும், தாவா செலவுத் தொகை பிரதிவாதியிடமிருந்து வாதிக்கு கிடைக்கவும், இன்னும் சமூகம் கோர்ட்டாரவர்களுக்கு தம்யுக்தமாகத் தோன்றும் இதர நியாய பரிகாரங்கள் வழங்கியும் தீர்ப்பு செய்ய வேண்டுமாய் வாதி தரப்பில் பிரார்த்திக்கப்படுகிறது.

இவ்வழக்கானது 13.02.2023–அன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்ததில், வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சுரேஷ்குமார் அவர்கள் வக்காலத்து தாக்கல் செய்திருந்தும் இன்று ஆஜராகாத நிலையில், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.பிரான்சிஸ் சேவியர் அவர்கள் முன்னிலையாகியும், வழக்கு கோப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

## தீர்ப்புரை

வாதி அழைத்தும் ஆஜரில்லை. வாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை. கடந்த 16.09.2013–அன்று எழுவினாக்கள் வனையப்பட்டன. இவ்வழக்கு கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெற்று வரும் நிலையில், வாதி தரப்புக்கு பல வாய்ப்புகள் வழங்கப்பட்டும் விசாரணை நடத்த வாதி தரப்பில் முன்வரவில்லை. வழக்கை மேல்நடத்த வாதி தரப்பில் ஆர்வம் காட்டாததால் நீதியின் நலன் கருதி இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2023–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 13–ஆம் நாள் இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

**வாதி தரப்பில் சாட்சி:**

காந்திமதி (வா.சா.1)

**வாதி தரப்பில் சான்றாவணங்கள்:**

1) 04.06.1992–ல் வாதியின் தாயார் அம்புசம் அம்மாள் பெற்ற கிரயப் பத்திரம் சான்றிட்ட நகல் – வா.சா.ஆ.1.
2) தாவா சொத்திற்கு யுடிஆர் சர்வேயில் அம்புசம் பெயரில் ஏற்பட்ட கூட்டு பட்டா வா.சா.ஆ.2.
3) 12.10.2010–ல் வாதி பெயரில் தாவா சொத்து அடங்கிய சர்வே எண்ணிற்கு ஏற்பட்ட கூட்டுப்பட்டா – வா.சா.ஆ.3.
4) 09.03.1998–ல் அம்புசம் இறந்ததற்கான இறப்பு சான்றிதழ் – வா.சா.ஆ.4.
5) 05.04.2004–ல் வாரிசு சான்றிதழ் – வா.சா.ஆ.5.
6) 29.10.2010–ல் வாதி தனிப்பட்டா வழங்க தாசில்தாருக்கு கொடுத்த மனுவின் நகல் மற்றும் செலானுடன் – வா.சா.ஆ.6.
7) பிராது வரைபடம் – வா.சா.ஆ.7.

**பிரதிவாதி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**:

–இல்லை–

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

(ஒப்பம்)திரு.S.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.